1972 மார்ச் 22]

தேர்வு என்று வைத்துவிடுவதால் பாடம் சொல்லிக் கொடுப்பவர்கள் அலட்சியமாக இல்லாமல் சொல்லிக் கொடுக்கும் சூழ்நிலேயும் ஏற்படும். கல்வித் தரம் ஓரளவு உயர வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொதுக் கேள்வித் தாள்கள் தயாரிக்கப்பட்டு அனுப் பப்படுகின்றன.

தஞ்சை மாவட்டத்துக்குப் புதுக் கல்லூரிகள்.

* 619 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், இந்தக் கல்வியாண்டில் எத்தனே புதிய கல்லூரிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தஞ்சாவூர் மாவட்டம், மன்னுர்குடியில் ஒரு அரசினர் ஆண்கள் கலேக்கல்லூரி 1971–72-ம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலேவர் அவர்களே, நடப்புக் கல்வி யாண்டில், புதுக் கல்லூரிகள் அமைக்கக் கோரி எந்தெந்த இடங்களி லிருந்து அரசுக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? அவைகளில் எவை எவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டைப் பொறுத்தவரை, மன்னுர்குடி, திருப்பூர், உடுமலேப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் அரசாங்கக் கல்லூரிகள் வைக்கப்பட்டன. தனியார் துறையில் ஏழு கல்லூரிகள் வைக்கப்பட்டன. மொத்தம் 169 கல்லூரிகள் இருக்கின்றன. வருகிற ஆண்டு புதுக் கல்லூரிகள் அரசுத் தரப்பில் நான்கு வைப்பதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்கள் என்பதும் தனியார் துறையில் என்னென்ன கல்லூரிகள் என்பதுபற்றி பல்கலேக் கழக முடிவு அரசினருக்கு வர வேண்டும். பிறகுதான் 1972–73-ம் ஆண்டுக்கான கல்லூரிகள் பற்றி அறிவிக்க இயலும்.